www.padippakam.com

# தேசிய இன பிரச்சினையும் தமிழ்நாடு மார்க்சிய லெனினிய கட்சியின் தன்னியல்பு தேசிய வாதமும்.

மார்க்சிய படிப்பு வட்டம்
சென்னை

படிப்பகம்

www.padippakam.com

முதல் பதிப்பு : ஆகஸ்ட் 1993.

விலை : ரூ. 3.00

எங்கள் இதர வெளியீடுகள் :

1 புரட்சிகர தோழர்களுக்கு ஒரு கடிதம்
2 புரட்சியாளர்களின் ஒற்றுமைக்கு செய்யவேண்டியது என்ன?

தொடர்பு முகவரி ;

K. முனுசாமி M. L. M.
36, சிவன்கோயில் தெரு,
சூளைமேடு, சென்னை-600094.

# தேசிய இனப்பிரச்சினையும் தமிழ்நாடு மார்க்சிய-லெனினியக் கட்சியின், தன்னியல்பு தேசிய வாதமும்

இ. பொ. க. முதற்கொண்டு இன்றைய பல்வேறு மா.லெ குழுக்கள் வரையிலான எழுபது ஆண்டுகால இந்திய கம்யூனிச வாலாற்றில், இதுவரை புலப்படாமல் இருந்த ஒரு 'வரலாற்று உண்மையை'— இதுவரை புரட்சி வெற்றியடையாததற்கு காரணமாயிருந்த வரலாற்று உண்மையை— முன்னாள் த. நா. அ க.வும், இதுவரை எழுபது ஆண்டுகால வரலாற்றின் தொடர்ச்சியாக தங்களை வதைத்துக்கொண்டிருந்த பாவங்களை எல்லாம் கழுவி இரட்சிக்கப்பட்டு வந்திருக்கும் அமைப்புமாகிய, இந்நாள் த. நா. மா. லெ.க, சமீபத்தில் கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறது. 'பாட்டாளி வர்க்க சர்வதேசியம்,' 'தூய வர்க்கப் பார்வை,' 'தேசிய சூனிய வாதம்' போன்ற பல்வேறு மார்க்சிய விரோத சித்தாந்தங்களை களைந்து, இன்று 'தூய மார்க்சிய—லெனினிய வாதிகளாக உருமாறி வந்திருக்கிறார்கள்.

இந்தப் புதிய கண்டுபிடிப்பு என்னவென்றால், பாட்டாளிவர்க்க தலைமையில் முதலாளித்துப் புரட்சியை

படிப்பகம்

www.padippakam.com



நடத்தாததுதான் இந்திய கம்யூனிச இயக்கம் இதுவரை வெற்றியடையாததற்கான பிரதான காரணம் என்பதாகும். இதன்மூலம், தேசிய இனப்பிரச்சனை குறித்து மார்க்சியம் முன் வைத்திருக்கும் பாட்டாளிவர்க்க அணுகுமுறையின் மேல் குட்டி முதலாளித்துவ வர்க்கப் பார்வையை புகுத்தி, மார்க்சியத்தை குட்டி முதலாளித்துவ தேசிய வாதம் எனும் நிலைக்கு தாழ்த்த த.நா.மா.லெ.க-வினர் பெரும் முயற்சி எடுத்துள்ளார்கள்,

இ.பொ.க (மா-லெ) 8-வது காங்கிரசில் முன் வைத்த 'தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை' வழங்குதல் என்ற அரசியல் தீர்மானத்தின்மீது இவர்கள் தங்களுடைய தாக்குதலை பிரதானமாக தொடுத்துள்ளார்கள். இது இன்று தமிழ் நாட்டை பொறுத்தவரை நீண்ட காலமாக இருந்து வருகின்ற குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்திற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது மட்டுமல்லாமல், ஏற்கனவே தன்னியல்பு நடைமுறையில் மூழ்கி இருக்கின்ற பல்வேறு மா-லெ குழுக்களின் அணிகளை நிலைகுலையவும் செய்துள்ளது. மார்க்சியத்தின் பெயரால் முன்வைக்கப்பட்டிருக்கும் இந்த கோட்பாட்டு கதம்பத்தை சித்தாந்த ரீதியாக எதிர்த்து முறியடிக்க வேண்டியது ஒவ்வொரு மார்க்சிய வாதியினதும் கடமையாகும்.

இதன் பால் ஒரு அலட்சியப்போக்கை கடைபிடிக்கவே, மா.அ கா., போல்ஷெவிக், மக்கள் யுத்தம் போன்ற குழுக்கள் விரும்புகின்றன. இதற்கு சித்தாந்த விளக்கமளிக்காமல் முத்திரை குத்தி ஒதுக்கி விடுவதையே இந்த குழுக்கள் தங்களுடைய பிரதான ஆயுதமாக கொண்டுள்ளார்கள். இது அவர்களின் இயலாமையைதான் காட்டுகிறது. மேலும், இது சரியான அணுகுமுறையல்ல. ஒரு தவறான கருத்துக்கு எதிரான தத்துவப் போராட்டத்தின் மூலம்தான் சரியான கருத்துடையவர்களை ஓரணியில்



ஐக்கியப்படுத்த முடியும். இதனடிப்படையில், தேசிய இனப்பிரச்சனை குறித்தும், பொதுவாக சனநாயகப் புரட்சி குறித்தும் மார்க்சியம் முன் வைக்கும் பார்வை என்ன என்று பரிசீலிப்பதும் த.நா.மா.லெ.க. வினரின் மார்க்சிய விரோதப் போக்கை விமர்சிப்பதுமே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவர்கள் இதுவரை வெளியிட்டுள்ள மூன்று புத்தகங்களிலிருந்தும் இவர்களுடைய இந்த 'புதிய வர்க்கப் பார்வை' என்ன என்பதை புரிந்து கொள்வது மிகக் கடினமான பணியாகும். அதாவது, ஒரே விசயத்தை திரும்ப திரும்ப குறிப்பிட்டு, என்ன சொல்கிறோம் என்பதை திட்டவட்டமாக கூறாமல், ஒரு குழப்பத்தையே ஏற்படுத்தி உள்ளார்கள். முதலாளித்துவ சனநாயகம் என்று சொன்னால் இவர்கள் எவ்வளவு ஆனந்தமடைகிறார்கள் என்பதை ஒவ்வொரு வரியும் சொல்லுகிறது அதன்பால் இவர்கள் காதல் வயப்பட்டிருக்கிறார்கள். மேலும், தங்கள் சொந்தவாதங்களை குறைவாக பயன்படுத்தி அதிகமாக லெனினின் வாதங்களை பயன்படுத்தி அவரும் இதே முடிவைத்தான் முன் வைத்தார் என்பது போன்ற ஒரு சித்திரத்தை உருவாக்கி வாசகர்களை குழப்புமுறப்பட்டிருக்கிறார்கள்.

எடுத்துக்காட்டாக, **'ஏகாதிபத்திய கால பொருளாதார வாதமும் மார்க்சியத்தை இழிவு படுத்தும் ஒரு கேலி சித்திரமும்'** என்ற கட்டுரையும், **'தேசிய இனப் பிரச்சனை பற்றிய விமர்சனக் குறிப்புகள்'** என்ற கட்டுரையும் ஒரே விசயத்தை குறிப்பதாக இருந்தாலும் இரண்டுக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடும் உண்டு. முன்னது; சனநாயகப் புரட்சி முழுமையடையாத தேசிய இனங்களின் தேசிய இயக்கங்களை மறுத்தவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வாதம். பிந்தியது இந்த தேசிய இனங்களுக்கு தனித்தனி பாட்டாளி வர்க்க கட்சி வேண்டுமென்றும், தனியாக

படிப்பகம்

www.padippakam.com



பிரித்து செல்வதுதான் ஒரே தீர்வு என்றும் சொன்னவர்களுக்கு எதிரான வாதம். இவை இரண்டும் ஒரே பார்வையை அடிப்படையாக கொண்ட இரண்டு விளக்கங்களாகும். முதல் கட்டுரையில் அதிகமாக முதலாளித்துவ சன நாயகப் புரட்சியின் வரலாற்று பாத்திரத்தையும், எல்லா பின்தங்கிய தேசிய இனங்களிலும் இன்னும் அந்த போக்கு நீடிப்பதையும், அதை நாம் அங்கீகரிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது. அதே நேரத்தில், பின் தங்கிய தேசிய இன பாட்டாளி வர்க்க கட்சியின் கடமை என்ன? அதன் குட்டி முதலாளித்துவ தேசிய வாதத்தின் பால் பாட்டாளி வர்க்கம் என்ன அணுகு முறையை மேற்கொள்ளவேண்டும் என்பதை இரண்டாவது கட்டுரை விளக்குகிறது.

ஆனால், த.நா.மா.லெ.க.வினர் என்ன செய்திருக்கிறார்கள் என்றால் முதல் கட்டுரையின் வாதத்தை தங்களுடைய நிலைபாட்டிற்கு ஆதாரமாக பயன் படுத்தி, தேசிய இனப் பிரச்சனைக்கு பட்டாளிவர்க்கம் முன் வைக்கும் தீர்வை (இரண்டாவது கட்டுரை) புறக்கணித்து விட்டு, தங்களுடைய குட்டி முதலாளித்துவ தேசியவாத சித்தாந்தத்திற்கு லெனினை சாட்சியாக்கியிருக்கிறார்கள். முதலாளித்துவ சனநாயகப் புரட்சி பற்றிய பாட்டாளி வர்க்கப் பார்வை என்ன; ஏகாதிபத்திய காலகட்டத்தில் சனநாயகத்தை முரணற்ற முறையில் நடைமுறைப் படுத்த பாட்டாளி வர்க்க தலைமையால் மட்டுமே முடியும் என்பதால், இந்த புதிய காலகட்டத்தில, பாட்டாளி வர்க்கம் தேசிய இனப் பிரச்சனையை எவ்வாறு அணுகுகிறது என்பதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவே இல்லை. இதற்கு மாறாக, அதிகமாக, ஐரோப்பாவில் முதலாளித்துவ காலகட்டத்தில் தேசிய அரசுகள் அமைக்கப்பட்டது பற்றியும், சுயேட்சையான பண்ட உற்பத்தி வளர்ச்சி அடைந்தது பற்றியும், இன்னும் இதனுடைய சிறப்புகள் பற்றியும் ஓயாமல் திரும்ப திரும்ப ஒப்பித்துள்ளார்கள். இப்படி இவர்கள் கூறுகின்ற முதலாளித்துவத்தின் சிறப்புகளையெல்லாம் ஒவ்வொன்றாக விளக்கி விமர்சிப்பது இக்கட்டுரையின் நோக்கமல்ல. வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தை அறிந்தவர்களுக்கு இது ஆரம்ப பாடம். எங்களை பொறுத்தவரை முதலாளித்தவ சனநாயகத்தின் சிறப்புகள் அனைத்தும் பாட்டாளிவர்க்க நலனுக்கு எந்த அளவுக்கு உகந்ததாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மட்டுமே முக்கியத்துவம் உடையதாகும். பட்டாளிகளால் முதலாளித்துவ சனநாயகத்தை வானளாவ புகழ்ந்து கொண்டு இருக்க முடியாது. இது குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு பொருத்தமான செயலாகும்.



மேற்குறிப்பிட்டபடி இங்கே வரிக்குவரி விமர்சனம் செய்யாமல், இவர்கள் தங்களுடைய புதிய நிலைபாட்டை என்ன அரசியல் புரிதலை ஆதாரமாகக் கொண்டு முன் வைக்கிறார்கள் என்பதை மட்டும் விமர்சனத்துக்கு எடுத்துள்ளோம். பிரதானமாக இரண்டு அரசியல் பிரச்சனைகளில் த.நா.மா.லெ.க.வினர் தவறு செய்திருக்கிறாகள். ஒன்று, 'சனநாயகப் புரட்சி', இன்னொன்று 'பல்தேசிய இன நாட்டின் பாட்டாளி வர்க்கப் புரட்சி.

**சனநாயகப் புரட்சியின் இரண்டு கட்டங்கள்**

முதலில் சனநாயகப் புரட்சி என்றால் என்ன என்பது குறித்து த.நா.மா.லெ.க.வினர் தந்துள்ள விளக்கங்களை பார்ப்போம்.

> ''சனநாயகப் புரட்சி என்பது என்ன? நிலப் பிரபுத்துவத்தை முற்றாக ஒழித்துக்கட்டும் புரட்சி எழுச்சியே சனநாயகப் புரட்சி எனப்படுகிறது. இது ஒரு முதலாளித்துவ புரட்சியேயாகும் இப் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கினால் கூட அதன் சாரம் முதலாளித்துவ சன நாயகப் புரட்சி என்பதிலிருந்து மாறுவதில்லை...

N.B.

படிப்பகம்

www.padippakam.com



"... இவை எல்லாம் சனநாயகப் புரட்சியும், தேசிய இயக்கமும் பிரிக்க முடியாது என்பதையும் (முதலாளித்துவ) சனநாயகப் புரட்சி என்பது ஒரே மொழி பேசும் தேசிய இன சமூக அடிப்படையிலேயே சாத்தியம் என்பதையும் தெளிவுபடுத்துவதாகும். இது முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி, பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி, பொருந்தக் கூடியதே.''

(புரட்சிக்கனல் — II, ப-6,7)

இங்கே சனநாயகப் புரட்சி என்பதை மிகவும் பொதுவானபொருளில் பயன்படுயித்தியிருக்கிறார்கள். புதிய சனநாயகப்புரட்சி என்றால் சாராம்சத்தில் முதலாளித்துவ சனநாயகப் புரட்சி என்று மாவோ விளக்கம் தருகிறார். இதன் பொருளென்ன? நிலப்பிரபுத்துவம் முற்றாக ஒழிக்கப்படாத நாடுகளில் புரட்சிக்கு பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் போது அங்கே சனநாயகத்தை நிறைவு செய்யும் பணியை தானே எடுத்துக் கொள்கிறது. இது அதன் அரசியல் சனநாயக கடமைகளை நிறைவு செய்வது எனும் பொருளில் தானே தவிர முதலாளித்துவ பொருளாதார உறவுகளை வளர்ப்பது எனும்பொருளிலல்ல. இங்கே தேசிய அரசு எனும் பிரச்சனையில் முதலாளித்துவ கால கட்டத்தின் அதே தீர்வுதான் இருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. ஏனென்றால், பாட்டாளி வர்க்கம் தனது சர்வதேச சோசலிச நலனை பிரதானப்படுத்தி அது வரலாற்று ரீதியாக கடந்துசெல்லவேண்டிய பாதைஎனும் பொருளில் மட்டுமே சனநாயக கோரிக்கைகளை அணுகுகிறது. இங்கே, தீர்மானகரமான பங்காற்றுவது பாட்டாளி வர்க்க சர்வதேச ஒற்றுமைதான். அதே நேரத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்கும் தனி அரசு அமைப்பதற்கான உரிமை உண்டு என்பதையும்



அங்கீகரிக்கிறது. இந்த பார்வையுடன்தான் சனநாயகப் புரட்சியை த.நா.மா.லெ.க-வினர் அணுகியிருக்கிறார்களா என்று பார்ப்போம்.

முதலாவதாக, சனநாயகப் புரட்சியின் இரண்டு கட்டங்களையும் மறுத்திருக்கிறார்கள். இதற்கு எங்கேயும் விளக்கம் தரப்படவில்லை. இரண்டாவதாக சனநாயகப் புரட்சிக்கு எந்த வர்க்கம் தலைமை தாங்குகிறதோ அந்த வர்க்கத்தின் நலன்தான் அதில் முன்னணிப் பங்கு வகிக்கும் என்பதும் விளக்கப்படவில்லை. அதாவது 1789 முதல் 1871 வரைக்குமான காலகட்டம் சனநாயகப் புரட்சியின் முதல் காலகட்டம். அதன் பிறகு முதலாளித்துவம் ஏகாதிபத்தியமாக மாறிய காலகட்டம் சனநாயகப் புரட்சியின் இரண்டாவது காலகட்டமாகும். இப்படி ஒரு திட்டவட்டமான ஆய்வின் அடிப்படையில் மட்டும்தான் நாம் சனநாயகப் புரட்சியை அணுக வேண்டும். முதல் காலகட்டத்தில் சனநாயகப் புரட்சிக்கு முதலாளி வர்க்கம் தலைமை தாங்கியது. அன்று அதன் பொருளாதார நலனுக்கு ஒரே மொழியை அடிப்படையாகக் கொண்ட தேசிய அரசு அமைப்பதை தவிர வேறு எந்த தீர்வும் பொருத்தமானதாக இருக்க முடியாது. இதை தீர்மானித்தது முதலாளி வர்க்க நலன். ஆனால் சனநாயகப் புரட்சியின் இரண்டாவது கால கட்டமாகிய இன்று, முதலாளித்துவ இலக்கம் முழுமை பெறாத பகுதிகளில் புரட்சிக்கு தலைமை தாங்க பாட்டாளி வர்க்கம் முன்வந்திருக்கிறது. இப்பகுதிகளில் நிலப் பிரபுத்துவம் இன்னும் முற்றாக துடைத்தெறியப்படவில்லை. சுருக்கமாக சொன்னால் இன்னும் ஒரு முழுமையான சனநாயக குடியரசு ஏற்படுத்தப்படவில்லை. இந்த அரசியல் சனநாயக கோரிக்கைகளை நிறைவேற்றுவதை பாட்டாளி வர்க்கம் தனது வரலாற்று கடமையாக உணர்ந்து, தனது சோசலிச நலனின் ஒரு பகுதியாக அதை இணைத்துக் கொண்டுள்ளது. ஆனால், தேசிய அரசு எனும் பிரச்

படிப்பகம்

www.padippakam.com



சனையில் பாட்டாளி வர்க்க சர்வ தேசிய ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு ஒரு தீர்வை முன்வைக்கிறது. பாட்டாளி வர்க்க நலன் என்பது குறுகிய தேசிய வாதத்தினுள் முடங்கிக் கிடப்பதல்ல. சாத்தியமானவரை பல் தேசிய இன பாட்டாளிகளை சுயவிருப்பத்தினடிப்படையில் இணைத்து சர்வதேச சோசலிசத்தை கட்டுவது அதன் மூலம் சர்வதேச ஒற்றுமைக்கு தீர்வு காண்பது. இது பாட்டாளி வர்க்கத்தின் பிரதான வரலாற்று கடமையாகும். இந்த வர்க்க நலன்தான் இரண்டாவது கால கட்டத்தின் சனநாயகப் புரட்சியை தீர்மானிக்கிறது. இப்படிப்பட்ட பார்வை இல்லாமல், இரண்டு கால கட்டங்களையும் திட்டவட்டமாக பிரித்து பார்க்காமல் சனநாயகப் புரட்சியைப் பற்றி பேசவே முடியாது. இப்படி ஒரு வர்க்கப் பார்வையை த.நா.மா.லெ.க-வினர் முன்வைக்கவேயில்லை. இப்படியல்லாமல், சனநாயகப் புரட்சியை கால கட்டங்களுக்கும் அப்பால் பொதுவாக விளக்க முயற்சிப்பது எப்பொழுதும் குட்டி முதலாளித்துவ வர்க்க நலனுக்கு சேவை செய்வதாக அமையும். இது பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு பெரும் தீங்கை விளைவிப்பதாகும்.

ஆக, கால கட்டங்களில் வந்த மாறுதலும் சரி, அதன் விளைவாக வர்க்க நலனில் ஏற்பட்ட மாறுதலும் சரி இவர்களுக்கு முக்கியமானதல்ல. அதனால்தான், ''**முதலாளித்துவ வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி, பாட்டாளி வர்க்கம் தலைமை தாங்கும் சனநாயகப் புரட்சியானாலும் சரி, ஒரே மொழி பேசும் தேசிய இன சமூக அடிப்படையிலேயே சாத்தியம்,**'' என்று பொதுவான விளக்கம் தருகிறார்கள்.

இனி 'ஒரே தேசிய இன அடிப்படையில் மட்டும்தான் சாத்தியம் என்று சொல்வதற்கு கீழ்க்கண்டவாறு ஒரு விளக்கம் இருக்குமா என்றும் பார்ப்போம். அதாவது, பாட்டாளி வர்க்க தலைமையில் ஒரு பல்தேசிய இன



நாட்டு மக்களை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் ஒன்று சேர்ந்து அதற்குள் இருக்கும் ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்தின் சனநாயக கோரிக்கைகளை நிறைவு செய்வது எனும் பொருளில்தான் கூறியுள்ளார்கள் என்று வைத்துக் கொள்வோம். (அதாவது, தனி அரசு அமைத்துக் கொள்வதற்கான முழு சுதந்திரம், தாய் மொழிக் கல்வி, ஒரே குறிப்பிட்ட தேசிய இன வட்டகையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார கட்டமைப்பு, இன்னும் இது போன்ற சனநாயக உரிமைகளை நிறைவேற்றுவது எனும் பொருளில்) ஆனால் நாங்கள் அப்படிக் கூறவில்லை என்று த.நா.மா.லெ.க-வினரே வேறு வார்த்தைகளில் கூறுகிறார்கள்.

> ''புரட்சிக்கு முந்தைய இரசியாவும், சீனாவும் சனநாயகப் புரட்சி கட்டத்தில் இருந்த பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட நாடுகளாகஇருந்த போதிலும், அந்நாடுகளின் பாட்டாளி வர்க்கக் கட்சிகள் தேசிய விடுதலைப் புரட்சி குறித்து **இத்தகைய** முடிவுகளை முன்வைக்கவில்லை என்பதும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்புதுடன் நிறுத்திக் கொண்டன என்பதும் உண்மையே.''
>
> (கட்சி தீர்மானம் 4:6)
>
> —அழுத்தம் எங்களுடையது.

இதற்குமேல் என்ன விளக்கம் வேண்டும். நாங்கள் கூறும் சனநாயகப் புரட்சியும், இரசிய, சீன நாடுகளில் நடத்தப்பட்ட புரட்சிகளும் ஒன்றல்ல என்பதை அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். அதாவது, அங்கே பல் தேசிய இனப்பாட்டாளிகள் ஒன்று சேர்ந்து சனநாயகப் புரட்சியை நடத்தின என்பதை ஒத்துக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. மேலும், அக்டோபர் புரட்சியை அங்கீகரிக்காமல் இன்று யாரும் புரட்சி பேசமுடியாது

படிப்பகம்

www.padippakam.com



என்பதால் அதை தவிர்க்கமுடியாமல் ஒத்துக் கொள்கிறார்கள். உண்மையில் இவர்கள் என்ன செய்திருக்கவேண்டும், நாங்கள் முதலில் குறிப்பிட்டதுபோல சனநாயகப்புரட்சிக்கு ஒரு பாட்டாளிவர்க்க பார்வை தந்திருக்கவேண்டும். அதாவது, இரண்டு காலக்கட்டங்களை அடிப்படையாக கொண்டு விளக்கமளித்திருக்க வேண்டும் அதற்கான எந்த முயற்சியும் இல்லை. முதலில் வர்க்கப் பார்வையுடன் சனநாயகப்புரட்சியை அணுக வேண்டும் என்பது இவர்களின் நோக்கமல்ல. அப்படி அணுகியிருந்தார்கள் என்றால் ஒரு பல்தேசிய இன நாட்டில் சனநாயகப் புரட்சிக்கு பாட்டாளிவர்க்கம் தலைமை தாங்குவதன் மூலம், சுய நிர்ணய உரிமை அடிப்படையில் சனநாயக கடமைகளை நிறைவு செய்வதன் மூலம், ஒன்றாக இருக்கமுடியும் என்பதை ஒரு பொதுக் கோட்பாடாக இவர்கள் அங்கீகரித்திருக்க வேண்டும். குறிப்பான சூழலில், மட்டுமே பிரிவினையை ஆதரிக்க வேண்டும், அதாவது, பிரிவினையின் மூலம்தான் பாட்டாளிவர்க்க ஒற்றுமையை பாதுகாக்கமுடியும் என்கிற நிலை எழும்போது — இலங்கை. இதனடிப்படையில், இந்தியாவின் குறிப்பான சூழலில் தனித்தனி அரசமைத்துக் கொள்வதன் மூலம்தான் இங்கே பாட்டாளிவர்க்க ஒற்றுமையை சாதிக்கமுடியும் என்று முடிவுக்கு வந்திருக்கவேண்டும். மேலும், அதற்கான திட்டவட்டமான விளக்கமும் அளித்திருக்கவேண்டும். அப்படி பார்க்கின்றபோது இரசியாவில் ஒற்றுமை சாத்தியமானதும் இங்கே சாத்தியமில்லை என்று முடிவுக்கு வருவதும் ஒரே வர்க்கநலனை அடிப்படையாக கொண்டிருக்கும்.

இந்த வடிவத்தில் சனநாயகப் புரட்சியை த. நா. மா. லெ க், வினர் அணுகவில்லை. அப்படி அணுகியிருந்தார்கள் என்றால்; ''**அந்நாடுகளின் பாட்டாளி வர்க்க கட்சிகள் தேசிய விடுதலைப் புரட்சி குறித்து இத்தகைய முடிவுகளை முன்வைக்கவில்லை என்பதும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதுடன் நிறுத்திக்கொண்டன என்பதும் உண்மையே**''- என்று குறிப்பிட்டிருக்கவேண்டிய அவசியமே இல்லை. ஆக, **பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கு**, இங்கே தனித்தனியாக போராடுவதுதான் தீர்வு என்கிற பொருளில் இவர்கள் அணுகவில்லை. மாறாக, சனநாயக புரட்சியின் முதல் கட்டத்தில் ஐரோப்பாவில் நடைபெற்ற அதே வடிவத்தில் முதலாளித்துவ புரட்சியை நடத்தவேண்டும் என்று கூறுகிறார்கள்.



வரலாற்று நிகழ்வுகள் எப்பொழுதும் ஒரே அச்சில் வார்த்ததை போன்று திரும்ப திரும்ப நிகழ்வதில்லை. ஒவ்வொரு புதிய வரலாற்று கட்டத்திலும் புதுப்புது பிரச்சனைகள் அரசியல் அரங்கில் தோன்றுகின்றன. இந்த ஒவ்வொரு புதிய காலகட்டத்திலும் அரசியல் பிரச்சனைகளுக்கு தலைமைதாங்க ஒரு புதியவர்க்கம் முன்னணிக்கு வருகிறது. இந்த புதியவர்க்கம் அது எதிர்கொள்கின்ற வரலாற்றுக் கடமைகளுக்கு தனது வர்க்க நலனின் அடிப்படையில் மட்டுமே தீர்வை முன்வைக்கிறது.

இன்றைய அரசியல் பிரச்சனைகளுக்கு தலைமை தாங்க தகுதியான ஒரே வர்க்கமாக பாட்டாளிவர்க்கம் அரங்கத்திற்கு வந்திருக்கிறது சர்வதேச ஒற்றுமையையும், சமாதானத்தையும் உருவாக்குவதுதான் பாட்டாளிவர்க்க நலன். அதே நேரத்தில், ஒரே மொழியை அடிப்படையாக கொண்ட தேசிய எல்லையை, வரலாற்றுரீதியானது என்றும் சனநாயகபூர்வமானது என்றும் அங்கீகரித்து, அது தனி அரசாக இருப்பதற்கான முழு உரிமையையும் அளித்து தன்னுடைய வர்க்கநலனின் ஒரு பகுதியாகவும், பல்வேறு சனநாயக கோரிக்கைகளில் ஒன்றாகவும் அதை பாதுகாக்கிறது. ஆனால், தேசிய அரசமைப்பது எனும் பிரச்சனைக்கு தனது வர்க்கநலனை அடிப்படையாக கொண்டுமட்டுமே தீர்வை முன்வைக்கிறது. ஒன்றாக இருப்பது என்று முடிவெடுத்தாலும், தனியாக இருப்பது

படிப்பகம்

www.padippakam.com



என்று முடிவெடுத்தாலும் சர்வதேச பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கு எது அதிக சாதகமானது எனும் பொருளில் மட்டுமே சிந்திக்கிறது. அதேநேரத்தில், பாட்டாளிவர்க்க சனநாயகப்புரட்சி காலகட்டத்தில் ஏற்கனவே சனநாயக மற்ற முறையில் ஒன்று சேர்ந்திருக்கும் தேசிய இனங்களுக்கிடையில் நிலவும் அனைத்து ஏற்றதாழ்வுகளுக்கும் சனநாயகபூர்வமான தீர்வை முன்வைத்து அந்த ஒற்றுமையை பாதுகாப்பதற்கு எப்பொழுதும் முதலிடம் அளிக்கிறது.

இதுதான் சனநாயகப்புரட்சி, மற்றும் தேசிய அரசமைப்பது என்கிற பிரச்சனைகளை வரலாற்றுரீதியாக ஆய்வுசெய்யும் முறை. ஆனால், சனநாயகப் புரட்சி என்றாலே அதற்கு தீர்வு ஒன்றுதான்; இதில் வர்க்க நலன் பற்றியெல்லாம் எங்களுக்கு கவலை கிடையாது எங்களுக்குத் தேவை தனிநாடு, இது உலகத்தின் பொதுவிதி. இதுதான் த. நா. மா. லெ. க-வினரின்பார்வை ஆனால் இதன் பின்னாலும் ஒரு வர்க்க நலன் ஒளிந்து கொண்டிருக்கிறது. அதுதான் குட்டி முதலாளித்துவ தேசிய பார்வை. குட்டி முதலாளிகள் தமது வர்க்க நலனை பாட்டாளிவர்க்க நலனுக்கு முன்னால் வைத்திருக்கவே எப்பொழுதும் விரும்புகிறார்கள்.

இந்த குட்டி முதலாளித்துவ தேசிய வாதம்தான் த.நா.மா.லெ.க-வினரின் தேசிய அரசமைக்கும் உரிமை எனும் வார்த்தையின் பின்னாலும் மறைந்திருக்கிறது. இது வரலாற்றை நேர்கோடாக பார்த்து வரலாற்று நிகழ்வுகளை கால கட்டங்களுக்கும் அப்பால் அப்படியே பொருத்த முயற்சிக்கும் வறட்டு சூத்திரவாதமாகும்,

பாட்டாளிகளை பொறுத்தவரை சனநாயக கடமைகளை நிறைவேற்றுவது எனபதை தனது சர்வ தேசிய வர்க்க நலனுக்குட்பட்டே சிந்திக்கிறது. தன்து நலனுக்கு ஏற்றதல்லாமல் இருக்கும்போது அது எந்த வகை தேசிய வாதமாக இருந்தாலும் அதை எதிர்த்து போராடவே,



செய்யும். இப்படி இந்த இரண்டு வர்க்க நலன்களை அடிப்படையாகக் கொண்ட இரண்டு தேசிய கண்ணோட்டத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இவைகளுக்கிடையில் இணக்கமும் காணமுடியாது. இதைப் பற்றிய லெனின் கூற்றை பார்ப்போம்;

> "முதலாளித்துவ தேசிய வாதமும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியமும் இணக்கம் காணமுடியாத பகைமை கொண்ட இருவேறு கோசங்களாகும். இவை முதலாளித்துவ உலகம் முழுமையிலும் நிலவும் மாபெரும் இருவேறு வர்க்க முகாம்களுக்கு ஏற்ப அமைந்து, தேசிய இனப் பிரச்சனையில் இருவேறு கொள்கைகளின் (இல்லை, இருவேறு உலக கண்ணோட்டங்கள்) வெளிப்பாடுகளாய் விளங்குகிறவை."
>
> (தே. இ.பி.ப.வி.கு, ப-17)

ஆனால், த.நா.மா.லெ.க-வினரின் அணுகுமுறை இதற்கு நேர்மாறானதாகும். தனது குட்டி முதலாளித்துவ பார்வையை மார்க்சிய வர்க்கப் பார்வைக்குள் நுழைக்க இவர்கள் கையாண்ட முதல் தந்திரம் இதுதான். சனநாயகப் புரட்சி பற்றிய புரிதலுக்கு அதன் இரண்டு கட்டங்களைப் பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாகும். இப்படியல்லாத பார்வை மாறாநிலை வாதமாகும்.

**பல்தேசிய இனநாடும் பாட்டாளி வர்க்கப் புரட்சியும்**

முதலில் சனநாயகப் புரட்சியை விளக்கும்போது இரண்டு கால கட்டங்களைப் பற்றியோ, அதன் விளைவாக வர்க்க நலன்களில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றியோ எந்தவித் விளக்கமும் அளிக்காமல், சனநாயகப் புரட்சிக்கு ஒரு குட்டி முதலாளித்துவ அணுகு முறையை முன்வைத்தார்கள். அதே போன்ற வர்க்கமற்ற பார்வையைத்தான் ஒரு பல்தேசிய இன நாட்டின் சனநாயகப் புரட்சி பற்றிய பிரச்சனைக்கும் முன்வைக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



ஒரு பல்தேசிய இன நாட்டின் பிரச்சனைக்கு வரும் பொழுது இரசியாவில் பல்வேறு தேசிய இனங்கள் பாட்டாளி வர்க்க தலைமையில் ஒன்று சேர்ந்து புரட்சி செய்து தங்களுடைய சனநாயக கடமைகளை நிறைவேற்றியதை மட்டும் அங்கீகரிக்கிறார்கள். அப்படி என்றால் இவர்கள் ஒரு பல்தேசிய இன நாட்டில் பல்வேறு தேசிய இனங்கள் ஒன்று சேர்ந்து அரசமைத்துக் கொள்வதன் மூலம் சனநாயக கடமைகளை நிறைவேற்ற முடியும் என்பதை ஒரு பொதுக் கோட்பாடாக அங்கீகரிக்கிறார்கள் என்று அர்த்தமா? நிச்சயமாக இல்லை. இது ஒரு திட்டமிட்ட ஏமாற்றாகும். ஏனென்றால், இரசியாவில் அப்படி ஒரு புரட்சி சாத்தியமானதற்கான காரணங்களாக த.நா.ம.லெ.க-வினர் கூறும் குறிப்பான விளக்கத்திலும், இந்தியாவில் அதை பொருத்துகின்ற விளக்கத்திலும் எந்தவித வர்க்கப் பார்வையும் இல்லை. முதலில்; இவர்கள் கூறுகின்ற இரசிய, இந்திய ஆகிய நாடுகளுக்கிடையிலான குறிப்பான வேறுபாடுகளை பார்ப்போம்:

> "புரட்சிக்கு முந்தைய இரசிய, சீன நாடுகளில் இருந்த தேசிய இனங்களில் ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் என்ற வேறுபாடு இருந்தது. ஆனால், இந்தியாவில் அனைத்து தேசிய இனங்களும் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு அடிமைப்படுத்தப்பட்ட ஒடுக்கப்படும் தேசிய இனங்களாகவே இருக்கின்றன. இங்கு தேசிய இனங்களை ஒடுக்கி வருவது இந்திய தேசியம் என்ற போர்வையில் உள்ள தரகு-பார்ப்பனிய ஏகாதிபத்தியமே. இது ஒரு தேசிய இனம் அல்ல என்பது முதலாவது வேறுபாடாகும். அடுத்து, அந்நாடுகளில் ஒடுக்கும் தேசிய இனங்களில் பாட்டாளி வர்க்க கட்சி பலம் வாய்ந்ததாகவும் புரட்சியை தலைமை



> தாங்கி வழி நடத்துவதாகவும் இருந்ததுடன் பல்வேறு ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வேலை திட்டத்தினை முன்வைத்து ஒரே கட்சியில் பல் தேசிய இனபாட்டாளி வர்க்க முன்னணிப் படையினரும் இணைய முன்னோடியாய் இருந்தன. இத்தகைய நிலை இந்தியாவில் இல்லை என்பது இரண்டாவது வேறுபாடாகும்."
>
> (கட்சி தீர்மானம் 4:7)

இரசியாவிற்கும், இந்தியாவிற்கும் இடையிலான வேறுபாடுகளாக, த.நா.மா.லெ க-வினர் குறிப்பிடும் முதல் வேறுபாட்டுடன் நாங்கள் உடன்படுகிறோம். அதாவது, இந்தியாவில் பகுதியளவில் ஒடுக்கும் தேசிய இனங்கள் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக அனைத்து தேசிய இனங்களையும் ஒடுக்குகின்ற ஒரு தேசிய இனம் இங்கு இல்லை. ஆனால், இரசியாவில் ஒன்றாக புரட்சி சாத்தியமானதற்கும், இந்தியாவில் அப்படி சாத்தியமில்லை என்று கூறுவதற்கும் தகுந்த திட்ட வட்டமான காரணிகளாக இது அமையவில்லை. இரண்டாவதாக கூறப்படும் வேறுபாடு இரசியாவின் பாட்டாளி வர்க்க கட்சி பலம் வாய்ந்ததாகவும், புரட்சியை தலைமை தாங்கி வழி நடத்துவதாகவும் இருந்தது; மேலும் அது ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வேலை திட்டத்தினை முன்வைத்தது. இந்த இரண்டு வாதங்களையும் பரிசீலிப்போம்.

இரசியாவில் அனைத்து தேசிய இன பாட்டாளிகளும் ஒரே கட்சியில் இணைவதற்கு மிகவும் முதன்மையான தீர்மானகரமான பங்கு வகித்த காரணி என்ன? அங்கே ஒடுக்கும் தேசிய இனம் இருந்தது என்று குறிப்பான

படிப்பகம்

www.padippakam.com



சூழலா; இல்லை ஒடுக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்க கட்சி பலம் வாய்ந்ததாக இருந்தது என்பதா? இவை இரண்டுமே அல்ல, மாறாக ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் சுதந்திரத்தை-தனி அரசு அமைப்பதற்கான உரிமையை-ஒடுக்கும் தேசிய இன பாட்டாளி வர்க்கம் ஆதரித்ததாகும். இந்த அரசியல் கோட்பாடுதான் சர்வ தேச பாட்டாளிகளின் ஒற்றுமையை தீர்மானித்த காரணியாகும். இதைப்பற்றி மேலும் விளக்கமாக பின்னால் கூறுகிறோம். அதற்குமுன் த.நா.மா.லெ.க-வினரின் வாதங்களை முழுமையாக பரிசீலிப்போம்.

இரசிய தேசிய இன பாட்டாளி வர்க்கம் சுயநிர்ணய உரிமையை கட்சி திட்டத்தில் ஏற்றுக் கொண்டதை குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் மேலும் அது விளக்கப்படவேயில்லை. ஒற்றுமைய தீர்மானித்த பிரதான காரணியாகு. இதை த.நா.மா.லெ.க-வினர் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை. இவர்களை பொறுத்தவரை அங்கே ஒடுக்கும் தேசிய இனம் இருந்ததும் அதில் பலம்வாய்ந்த பாட்டாளி வர்க்க கட்சி இருந்ததும்தான் அந்த ஒற்றுமையை தீர்மானித்த முதல் காரணிகளாகும். அதனால்தான் இந்தியாவில் ஒரே கட்சி சாத்தியமில்லை என்பதற்கு பின்வருமாறு இதேபோன்ற விளக்கத்தை தருகிறார்கள்.

> ''இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாததால் (அதில் பலமான பாட்டாளி வர்க்க இயக்கம் இருக்கிறதா என்ற பரிசீலனைக்கே இடமில்லை) இங்கு ஒரே கட்சி ஒட்டுமொத்த புரட்சி என்ற பிரச்சனைக்கே இடமில்லை. இத்தகைய சிந்தனை இந்தியாவில் தேசிய விடுதலையையும் சனநாயகப்-புரட்சியையும் நிறைவேற்ற உதவுவதற்கு பதில் ஊறுவிளைவிக்கவே செய்யும். இங்குள்ள ஒரே வழி ஒவ்வொரு தேசிய இன பாட்டாளி வர்க்கமும்



> தமது சொந்த கட்சியை கட்டி தேசிய விடுதலையுடன் இணைந்த வடிவில் சனநாயகப் புரட்சியை முன்னெடுத்துச் செல்வதன்றி வேறில்லை.''
>
> (கட்சி தீர்மானம் 4:9)

இதை தான் நாங்கள் முதலிலும் குறிப்பிட்டோம். இவர்கள் வர்க்கப்பார்வையுடன் பிரச்சனைகளை அணுகவேயில்லை. அங்கு ஒடுக்கும் தேசிய இனம் இருந்ததும், அதில் ஒரு பலம் வாய்ந்த பாட்டாளிவர்க்க கட்சி இருந்ததும் ஒரு பல்தேசிய இன நாட்டின் குறிப்பான சூழல். ஆனால் பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கு இது தீர்மான கரமான பங்காற்றமுடியாது. மாறாக, இரண்டு (ஒடுக்கும், ஒடுக்கப்படும்) தேசிய இனங்களுக்குமிடையில் முன்வைக்கப்பட்ட அரசியல் பிரச்சனை என்ன என்பது தான் பிரதானமானதாகும்.

இவர்களுடைய வாதத்திற்கே வருவோம். மா-ரூஷ்ய தேசிய இன பாட்டாளிவர்க்கம் பலம் வாய்ந்த கட்சியாக இருந்து ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கவில்லை என்று வைத்துக் கொள்வோம். இப்போது ஒற்றுமை சாத்தியப்படுமா? சாத்தியமில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். அப்போது இங்கே ஒற்றுமைக்கு தீர்மானகரமான பங்காற்றியது மேற்சொன்ன அரசியல் கோட்பாடுதான். ஆனால், த.நா.மா லெ.க.வினர் இந்த அரசியல் கோட்பாட்டை பிரதானப்படுத்தவில்லை. இவர்கள் செய்த இரண்டாவது தவறு இதுதான். உள்ளடகத்தை — அரசியல் கோட்பாட்டை விட்டுவிட்டு, வடிவத்தை—ஒடுக்கும் தேசிய இனம், பலம் வாய்ந்த பாட்டாளிவர்க்க கட்சி ஆகிய வற்றை—பிரதானப்படுத்தி தங்களது மார்க்சிய மேதா விலாசத்தை காட்டியுள்ளார்கள்.

இனி, ஒற்றுமையை சாத்தியப்படுத்திய அந்த அரசியல் கோட்பாட்டை மேலும் திட்டவட்டமாக

படிப்பகம்

www.padippakam.com



புரிந்துகொள்ள முயற்சிப்போம். ஒடுக்கும் தேசிய இனத்திற்கும், ஒடுக்கப்பட்ட தேசிய இனத்திற்கும் இடையிலான முக்கிய வேறுபாடு என்னவென்றால், ஒடுக்கும் தேசிய இனம் இயற்கையாகவே ஒரு பல்தேசிய இனநாட்டிற்குள் தனிச்சலுகை பெற்ற தேசிய இனமாக இருக்கிறது. ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் நிலை இதற்கு நேர்மாறானதாகும். அப்போது இந்த இரண்டு தேசிய இன பாட்டாளிகள் மத்தியிலும் ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், திட்டவட்டமாக இந்த இரண்டு பாட்டாளி வர்க்கங்களுக்கிடையிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளுக்கு தீர்வு காணவேண்டும். இதை போல்ஷெவிக் கட்சி எப்படி செய்தது என்றால்; மா-ருஷ்ய பாட்டாளிகள் தங்களது பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து உக்ரேன், மற்றும் பைலோ ருஷ்யர்களின் முழுவிடுதலையை அங்கீகரிக்கவேண்டுமென்று கோருமாறும், அதேநேரத்தில் உக்ரேன் மற்றும் பைலோ-ருஷ்ய பாட்டாளிகள் தங்களது பூர்ஷ்வா வர்க்கத்தை எதிர்த்து மா-ருஷ்ய பாட்டாளிகளுடன் ஒன்றுசேருவோம் என்று கோருமாறும் செய்ததன் மூலம், ஒடுக்கும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கிடையிலான சமத்துவமின்மைக்கு தீர்வு கண்டது. இதன் மூலம் ஒடுக்கும் தேசிய இன மற்றும் ஒடுக்கப்படும் தேசிய இன பாட்டாளி வர்க்கங்களுக்கிடையிலான சர்வதேச ஒற்றுமையை பாதுகாத்தது. அங்கே என்று சேர்ந்து புரட்சியை சாத்தியமாக்கிய காரணியும் இதுதான். இதைத்தான் லெனின் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்;

"எவ்வகையான தேசிய வாதத்தையும் எதிர்க்கும் பாட்டாளிகள் "அருமையான" சம அந்தஸ்தை கோருகிறார்கள்; சிறிதளவில் கூட யாருக்கும் சிறப்பு உரிமைகள் இருக்கக்கூடாது என்று கோட்பாட்டு அடிப்படையில் அவர்கள் கோருகிறார்கள்...

...எல்லாத் தேசிய இனங்களுக்கும் பிரிந்து போகிற உரிமையை ஒத்துக்கொள்வது; பிரிந்து போகிற



பிரச்சனை எழுகின்றபோது எல்லா ஏற்றதாழ்வுகளையும், எல்லா சிறப்பு உரிமைகளையும், எல்லா தனித்துவப் போக்கையும் நீக்கும் நோக்கத்துடன் அதை அணுகி சீர்தூக்கிப்பார்ப்பது".

(தே. இ. சு. உ, ப—32, 35)

இப்படிப்பட்ட ஒரு பார்வையை த.நா.மா.லெ.க.வினர் எங்கேயாவது தந்திருக்கிறார்களா? இல்லை இவர்களை பொறுத்தவரை இங்கே தமிழ்நாட்டில் நிலவுகின்ற குட்டி முதலாளித்துவ தேசியவாதத்திற்கு சித்தாந்த தலைமை அளிக்கவேண்டும். அதன் மூலம் தமிழர்களின் தனிச்சலுகைக்காக போராடவேண்டும். பாட்டாளி வர்க்க சர்வதேச ஒற்றுமை என்றெல்லாம் சொல்வது இவர்களின் வர்க்கநலனுக்கு சாதகமானதல்ல. அதனால் தான், பல்தேசிய இன நாட்டின் தேசிய இனப்பிரச்சனையை திட்டவட்டமான பாட்டாளிவர்க்க பார்வையின் அடிப்படையில் விளக்காமல், ஒரு குறுக்கு வழியை கண்டுபிடித்துள்ளார்கள். இரசியாவில் ஒடுக்கும் தேசிய இனம் இருந்தது; இங்கே ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. அதனால் ஒற்றுமை சாத்தியமில்லை. இது இவர்கள் மார்க்சிய அரிச்சுவடியைக்கூட அறியாதவர்கள் என்பதை வெளிப்படுத்திவிட்டது.

அப்படி நீங்கள் மார்க்சியத்தை கற்றுக்கொள்ள விரும்பினீர்கள் என்றால் தேசிய இன பிரச்சனை பற்றிய பாட்டாளிவர்க்க அணுகுமுறையின் கீழ்கண்ட ஆரம்ப பாடத்தை மனப்பாடம் செய்துகொள்ளும்படி சிபாரிசு செய்கிறோம்.

"சம அந்தஸ்தும் தேசிய அரசு அமைக்கும் சம உரிமைகளும் வேண்டும் என்பதை அங்கீகரிக்கும் அதே சமயத்தில் எல்லாத் தேசிய இனங்களையும் சேர்ந்த பாட்டாளிகள் கூட்டாக

படிப்பகம்

www.padippakam.com



இணைந்து இருப்பதை மிகவும் முதன்மையான தாக கருதிப் போற்றுகிறது; எந்த ஒரு தேசியக் கோரிக்கையையும் ஒந்த ஒரு தேசிய பிரிவினையை யும் தொழிலாளர் வர்க்கப்போராட்டம் என்ற கோணத்திலிருந்து மதிப்பிடுகிறது'!

(தே.இ.அ.உ. ப—33)

இனி இந்தியாவின் பிரச்சனைக்கு வருவோம். தெளிவான விளக்கத்திற்காக மேலே நாங்கள் குறிப்பிட்ட த.நா.மா.லெ.க-வினரின் கட்சி தீர்மானத்தை மீண்டும் தருகிறோம்.

"இந்தியாவில் ஒடுக்கும் தேசிய இனம் என்று ஒன்று இல்லாததால் (அதில் பலமான பாட்டாளிவர்க்க இயக்கம் இருக்கிறதா என்ற பிரச்சனைக்கே இடமில்லை) இங்கு ஒரே கட்சி ஒட்டுமொத்தப் புரட்சி என்ற பிரச்சனைக்கே இடமில்லை."

இவர்கள் இந்த முடிவுக்கு எப்படி வந்தார்கள்? இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்களுக்கிடையிலான உறவுகளை ஆய்வு செய்து, இங்கே தனித்தனியாக போராடுவதன் மூலம்தான் பாட்டாளி வர்க்க சர்வதேச ஒற்றுமையை பாதுகாக்க முடியும் என்ற அடிப்படையில் இந்த முடிவுக்கு வந்தார்களா? அப்படியெல்லாம் இல்லை. இங்கே ஒடுக்கும் தேசிய இனம் இல்லை. அதனால் பலம் வாய்ந்த பாட்டாளிவர்க்க கட்சி இருக்கிறதா என்ற பிரச்சனைக்கும் இடமில்லை. இதுதான் காரணம்.

இங்கே இவர்கள் 'பலம் வாய்ந்த பாட்டாளிவர்க்கக் கட்சி' என்று சொல்லுகிறார்களே அதன் பொருளென்ன? வேறொன்றுமில்லை. அமைப்பு பலத்தைதான் அப்படி கூறுகிறார்கள். இதைத்தான் முதலிலேயே சொன்னோம் இவர்களுக்கு உள்ளடக்கம் ஒரு பொருட்டே அல்ல. வடிவம் தான் பிரதானமானது. நாங்கள் இப்படி நினைக்க



வில்லை. எங்களை பொறுத்தவரை பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்கக் கட்சி என்றால் அரசியல் பலம்வாய்ந்தது எனும் பொருளில் மட்டுமே எடுத்துக்கொள்வோம். அமைப்பு பலம் என்பது துணை அம்சம். இந்த பொருளில் பலம் வாய்ந்த பாட்டாளி வர்க்க கட்சி இல்லை என்பதை நாங்கள் கூறுகிறோம். இன்னும் ஒரு சரியான சித்தாந்த தலைமை உருவாகவில்லை எனும் பொருளில்.

இனி, இங்கே வெவ்வேறு தேசிய இனங்களின் பாட்டாளி வர்க்கங்களுக்கிடையிலான உறவைப்பற்றிய பிரச்சனைக்கு வருவோம். கேரள பாட்டாளிகளுக்கும் தமிழக பாட்டாளிகளுக்கும் இடையிலான உறவென்ன? சமத்துவமற்ற ஏற்றத்தாழ்வான (ஒடுக்கும். ஒடுக்கப்படும்) உறவா? இல்லை. தமிழர்களின் விடுதலைக்கு மலையாளிகளும் எதிரானவர்கள் அல்ல; மலையாளிகளின் விடுதலைக்கு தமிழர்களும் எதிரானவர்களல்ல. அப்போது, இந்த இரண்டு இன பாட்டாளிகளும் ஒன்று சேர முடியாது என்று சொல்வதற்கான காரணமென்ன? த.நா.மா.லெ.க.வினரை பொறுத்தவரை ஒடுக்கும் ஒடுக்கப்படும் எனும் வடிவத்தில் இருந்தால் மட்டுமே ஒற்றுமை சாத்தியமாகும். மலையாளிகள் தமிழர்களை ஒடுக்கவேண்டும் அல்லது தமிழர்கள் மலையாளிகளை ஒடுக்கவேண்டும். இயற்கையாக அமைந்த சமத்துவத்தின் அடிப்படையில் இரண்டு பேரும் ஒன்று சேர முடியாது. இதைப்பற்றிய மார்க்சிய பார்வை என்ன; பிரிந்து போவதா? ஒன்றாயிருப்பதா என்பதை தீர்மானிப்பது எது? இதில் எந்த தீர்வு பாட்டாளிவர்க்க சர்வதேச ஒற்றுமைக்கு அதிகசாதகமானது என்பதை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கிறோம். (ஈழ விடுதலையை ஆதரிப்பது இதனடிப்படையில்தான்). அப்போது இங்கே! கேரள மற்றும் தமிழக பாட்டாளிகளைப்பற்றிய பிரச்சனையில் இவர்கள் ஒன்றாக இருப்பது சர்வதேச ஒற்றுமைக்கு அதிக சாதகமானதா? பிரிந்திருப்பது அதிக

படிப்பகம்

www.padippakam.com



சாதகமானதா? ஒன்றாக இருப்பது பாட்டாளிவர்க்க ஒற்றுமைக்கு அதிக சாதகமானது என்பதுதான் மார்க்சிய பார்வை ஆனால், த.நா.மா.லெ.க.வினரை போன்ற குட்டி முதலாளித்துவ வாதிகளுக்கு தனியாக இருப்பதன் மூலம்தான் இவர்களுடைய நலன் அதிகமாக் பாது காக்கப்படும். இதை தமிழர்களுக்கான தனிச்சலுகை எனும் பொருளில் தான் சிந்திக்கிறார்கள். நீண்டகால மாகவே பல்வேறு தேசிய இன பாட்டாளிகள் இங்கே ஏற்படுத்தியிருக்கும் சர்வ தேசிய உணர்வையும், சமத்துவத் தையும் அடிப்படையாக கொண்டு இவர்கள் சிந்திக்க வில்லை. குட்டி முதலாளித்துவ தேசிய வாதிகளுக்கு நிச்சயமாக இதை புரிந்துகொள்ள முடியாது. மேலும் இதற்கான சிறப்பான விளக்கமாக இந்தியாவின் இரண்டு முக்கிய தேசிய இனப்பகுதிகளைப் பற்றிய எடுத்துக் காட்டை தருகிறோம். ஒன்று ஜார்க்கண்ட; இன்னொன்று சட்டீஸ்கர்.

ஜார்க்கண்ட பகுதியில் வேலை செய்யும் பெரும் பாலான பாட்டாளிகள் (80%) வடபீகாரி, வங்காளி மற்றும் பிறதேசிய இனத்தை சேர்ந்தவர்கள். ஜார்கண்ட் மக்கள், வெளிப்பகுதிகளிலிருந்து தங்கள் பகுதியில் குடியேறியவர்களையும் தங்களை சுரண்ட வந்தவர்களை யும் குறிப்பதற்கு பொதுவாக 'டிகு' என்ற சொல்லை பயன்படுத்துகிறார்கள். அவர்கள் பால் பகைமையும் கொண்டிருக்கிறார்கள் ஜார்க்கண்டிகளை பொறுத்தவரை அவர்களின் ஒரே ஆதாரமான வேலை வாய்ப்பையும் பிற தேசிய இனபாட்டாளிகள் அபகரித்துக் கொண்டுள் ளார்கள். ஆனால், இந்த பிறதேசிய இன பாட்டாளிகளை மட்டும் அவர்கள் 'டிகு' என்று குறிப்பிடுவதில்லை. வடபீகாரை சேர்ந்த பாட்டாளிகளைகூட எதிரிகளாக பார்ப்பதில்லை. ஏனென்றால் இந்த பிறதேசிய இன பாட்டாளிகள் ஜார்கண்ட் விடுதலை இயக்கத்தில் தீவிர மாக பங்கு கொண்டு ஜார்கண்ட் மக்களுடன் தங்களை



ஐக்கியப்படுத்தியிருக்கிறார்கள். மேலும், உயிர் தியாகங் களும் செய்துள்ளார்கள். இதே போன்ற ஒரு சூழல்தான் சட்டீஸ்கரிலும் நிலவுகிறது. இங்கே வேலை செய்யும் பாட்டாளிகளில் 90% பேர் பிறதேசிய இனத்தை சேர்ந்த வர்கள். இங்கேவும் இவர்கள் 'சட்டீஸ்கர் விடுதலை இயக்கத்தில்' தீவிரமான பங்கு வகிக்கிறார்கள். இந்த சட்டீஸ்கார் விடுதலை முன்னணி சட்டீஸ்காரை தேசிய இனமாக அங்கீகரிக்கவேண்டும் என்பதை பிரதான கோச மாக வைத்திருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இதுபோன்ற இன்னும் ஏராளமான சான்றுகளை இந்தியாவின் பெரும்பாலான பகுதிகளில் பார்க்க முடியும். இதுதான் பாட்டாளி வர்க்க ஒற்றுமை. இப்படிப்பட்ட திட்டவட்டமான உண்மைகளிலிருந்து தான் ஒற்றுமை சாத்தியமா இல்லையா என்ற முடிவுக்கு வரவேண்டும். மாறாக, ஒடுக்கும் தேசிய இனம் இருக்கிறதா இல்லையா என்று பார்ப்பதன் மூலமல்ல.

**ஏகாதிபத்திய பொருளாதார வாதி லெனினும், மார்க்சியவாதி கார்முகிலும்**

இனி இன்னொரு முக்கியமான பிரச்சனைக்கு வருவோம். இ. பொ. க (மா-லெ)யின் கட்சி திட்டத்தில் இருக்கும் 'தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்குதல் எனும் தீர்மானம் பற்றிய இவர்களின் குற்றச்சாட்டு என்ன என்று பார்ப்போம். முதலில் இ.பொ க (மா-லெ)யின் வரலாற்று பாத்திரத்தைப் பற்றிய இவர்களின் விளக்கத்தை பார்ப்போம்.

> "இந்திய பொதுஉடமை இயக்கத்தில் இ.பொ.க., இ.பொ.க.(மா) ஆகியவற்றுக்கு பின் மூன்றாவது முக்கிய பிரிவாக் தோன்றியது இ.பொ.க. (மா-லெ), இ.பொ.க(மா)விலிருந்து பிளவுபட்டு தோன்றிய இக்கட்சி அதிலிருந்து மாறுபட்ட பல முக்கிய முடிவுகளை கொண்ட

படிப்பகம்

www.padippakam.com



தாக விளங்கியது. இ.பொ.க-வும் இ.பொ.க(மா)வும் இந்திய பெரு முதலாளிகளை தேசிய முதலாளிகள் என்று தீர்மானித்ததற்கு மாறாக இ.பொ.க (மா-லெ) தரகு முதலாளிகள் என்று தீர்மானித்தது. அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஆயுதப் போராட்ட வழியை உயர்த்திப் பிடித்தது. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தீர்மானத்தை மீண்டும் கட்சி திட்டத்தில் இணைத்துக் கொண்டதுடன் தேசிய விடுதலை போராட்டங்களுக்கு உறுதியான ஆதரவளித்தது. சர்வதேச திரிபுவாதமான குருச்சேவ் புரட்டல்வாதத்தை நிராகரித்து மார்க்சிய—லெனினிய மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்தது. ம.தி. அமைப்பு, ம.தி. இயக்கம் ஆகியவற்றை புறக்கணித்தது, புறக்கணிப்புவாதம், தனிநபர் அழித்தொழிப்பு போன்ற பல்வேறு இடது தவறுகள் கொண்டதாக இருப்பினும் கட்சியின் இம்முடிவுகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகும். எனினும் இ.பொ.க (மா-லெ)யும் தேசம் பற்றிய விசயத்தில் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்திலிருந்து விடுபடவில்லை. இ.பொ.க என்ற அமைப்பே இதற்கு ஒரு தடை என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.''

(பு.க I,. ப-13)

திரும்பவும் த.நா.மா.லெ. க-வினர் தங்கள் சுயபுத்தியை காட்டிவிட்டார்கள். இ.பொ.க என்ற பெயர் வைத்திருந்ததினால் மா-லெ இயக்கம் ஏகாதிபத்திய பொருளாதார வாதத்திலிருந்து விடுபடவில்லையாம். ஏகாதிபத்திய பொருளர்தார வாதம் என்றால் என்ன? ஏகாபத்திய கால கட்டத்தில் சுயநிர்ணய உரிமை சாத்தியமில்லை என்றுகூறி ஒடுக்கப்படும் நாடுகளின் தேசிய இயக்கங்களை புறக்கணித்தவர்களைத்தான் ஏகாதிபத்திய



பொருளார்தார வாதிகள் என்று லெனின் அழைத்தார். இ.பொ.க (மா-லெ) சுயநிர்ணய உரிமை தேவை இல்லை என்று சொன்னதா? அது தேசிய விடுதலை இயக்கங்களுக்கு உறுதியான ஆதரவளித்ததை நீங்களே ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். இ.பொ.க., இ.பொ.க(மா) ஆகிய கட்சிகளுக்கு நீங்கள் கூறுவது பொருந்தும்.

ஆனால்,இ.பொ.க(மா-லெ)யிடம் வேறு என்ன நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். இந்தியாவின் தேசிய இனச்சிக்கல்களைப் பற்றி குறிப்பான ஆய்வுகள், எதையும் செய்யவில்லை என்பது உண்மைதான். இந்த தவறுகூட தேசிய இனப்பிரச்சனையை மட்டும் சம்மந்தப்பட்ட தவறல்ல. ஒட்டுமொத்தமாக அரசியலையும், சித்தாந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும் புறக்கணித்ததில் இருந்து வந்த தவறாகும். திட்டம், யுத்த தந்திரம் உள்ளிட்ட அனைத்து பிரச்சனைகளும் திட்டவட்டமாக ஆய்வு செய்யப்படவில்லை. நடைமுறையே பிரதானம் என்று வலியுறுத்தியது. அதே நேரத்தில் சுயநிர்ணய உரிமை எனும் அரசியல் கோட்பாடு மிகச்சரியானதுதான். சுயநிர்ணய உரிமை என்றாலே பிரிந்து போகும் உரிமை எனும் பொருளில் தான் மூன் வைக்கப்பட்டது. அதனால்தான், காஷ்மீர், மற்றும் வடகிழக்கு தேசிய இனங்களின் விடுதலையை அங்கீகரித்தது.

இதற்கும் மேலாக நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பது இப்பொழுது புரிகிறது. அகில இந்திய கட்சியை கட்டாமல் ஒவ்வொரு தேசிய இனங்களிலும் குட்டி முதலாளித்துவ வர்க்கங்களுக்கு தலைமை அளித்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். இது பாட்டாளி வர்க்கத்தின் பணியல்ல. சாத்தியமான இடங்களில் ஒற்றுமைக்காக போராடுவதுதான் பாட்டாளி வர்க்கத்தின் பணி. ஆனால் இது நிச்சயமாக உங்களுக்கு பொருத்தமான செயலாகும். இ.பொ.க (மா-லெ)யின்

படிப்பகம்

www.padippakam.com



இந்த முடிவுகளை நீங்கள் ஏகாதிபத்திய பொருளாதார வாதம் என்று கூறுவீர்களானால், இதே போன்ற ஒரு 'குற்றத்தை' லெனினும் புரிந்துள்ளார். அந்த குறுகிய புத்தியுடைய குறுந்தாடிக்காரரர் அனைத்து தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை உண்டு என்றுகூறி மிகவும் நயவஞ்சகமாக ஜாரினுடைய அதே சிறை கூடத்தை வெள்ளையடித்து மினுக்கிவிட்டு உக்ரேனியர்கள், ஜார்ஜியர்கள் இன்னும் இது போன்ற தேசிய இனங்களையும் ஏமாற்றியிருக்கிறார். உண்மையில் அங்கே சனநாயகப் புரட்சி குருச்சேவ் அவர்களின் வருகையுடன்தான் துவங்கியது. இன்று அது வெற்றியடைந்து அனைத்து ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களும் விடுதலை அடைந்துவிட்டார்கள். இந்த 'படுபாதகமான குற்றத்தை' புரிந்ததற்காக நாங்கள் லெனினை 'ஏகாதிபத்திய பொருளாதார வாதி' என்று முத்திரை குத்துகிறோம். இந்த 'மார்க்சிய உண்மையை' எங்களுக்கு உணர்த்தியதற்காக உங்களுக்கு பாராட்டுகள். இந்த கண்டு பிடிப்புக்கு மூளையாக செயல்பட்ட திருவாளர் கார்முகில் அவர்கள்தான் உண்மையான மார்க்சியவாதி.

**த. நா. மா. லெ. க-வும் தன்னியல்பு தேசியவாதமும்**

சனநாயகப் புரட்சிக்கு விளக்கமளிக்கும்போதும் சரி, ஒரு பல்தேசிய இனநாட்டின் சனநாயகப் புரட்சியை விளக்குகின்ற போதும் சரி த. நா. மா. லெ. க-வினர் எந்த்விதமான மார்க்சிய பார்வையையும் முன்வைக்கவில்லை. அதற்குமாறாக திட்டவட்டமான குட்டி முதலாளித்துவ வர்க்க நலனைத்தான் வெளிப்படுத்தியுள்ளார்கள். இன்று இவர்கள் தங்களுடைய பழைய தன்னியல்பு நடைமுறையை திருத்தும் போக்கில் **தன்னியல்பு தேசியவாதத்திற்குள் வீழ்ந்திருக்கிறார்கள்.**

இ. பொ. க. (மா-லெ) உடைந்த பிறகு சித்தாந்தப் போராட்டத்தை பிரதானப்படுத்தி மறுபடியும் ஒரு



அரசியல் ஐக்கியத்தை சாதிப்பதற்கு பதிலாக பிரிந்து சென்ற குழுக்கள் அனைத்தும் தங்களை பகுதி அளவிலான வேலைகளுடன் முடக்கிக்கொண்டுள்ளன. கட்சிகட்டும் பிரச்சனையை மத்தியப்படுத்தப்பட்ட நடவடிக்கையாக பார்க்காமல் பகுதி அளவிலான நடைமுறையில் மூழ்கி இருந்துகொண்டு சாதிக்க முற்படுகிறார்கள். இதைத்தான் நாங்கள் '**தன்னியல்பு நடைமுறை**' என்று **புரட்சியாளர்களின் ஒற்றுமைக்கு செய்யவேண்டியது என்ன**' என்ற பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தோம். இந்த தவறை மறைமுகமாக த. நா. மா. லெ. க- ஒத்துக்கொண்டிருக்கிறது. ஒரு புறம் அகில இந்திய கட்சி கட்டுவதற்கான வேலை தான் பிரதானம் என்று கூறிக்கொண்டு இன்னொருபுறம் குறைந்தபட்ச அமைப்புபலம் பெறுவது எனும் பெயரால் தன்னியல்பு நடைமுறையில் மூழ்கி இருந்ததை அவர்களே விளக்கியுள்ளார்கள்.

ஆனால், கட்சிகட்டும் பிரச்சனையை எப்படி அணுகியிருக்கவேண்டும். அகில இந்திய அளவில் மத்தியப்படுத்தப்பட்ட வடிவில் சித்தாந்தப் போராட்டத்தை துவக்கி ஒத்த கருத்துடைய முன்னணியினரை ஒன்று சேர்த்து புரட்சியாளர் ஒருங்கிணைப்பு கமிட்டியும் தொடர்ந்து காங்கிரசை கூட்டுகின்ற வடிவுலும் அணுகியிருக்க வேண்டும். இதுதான் விஞ்ஞானமுறையில் கட்சிகட்டுவது என்பது. இதற்குமாறாக, தங்களுடைய பகுதி நலனை பிரதானப்படுத்தி தனது குழுவை பலப்படுத்துவது அதன் மூலம் அகில இந்திய அங்கீகாரத்தைப் பெறுவது எனும் வடிவில் தலைகீழாக செயல்பட்டது. இன்று என்ன முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அகில இந்திய கட்சி கட்ட முற்பட்டதுதான் தவறுகளுக்கான காரணமாக சுயவிமர்சனம் செய்கிறார்கள். ஆனால், உண்மையில் அப்படி ஒரு முயற்சி இவர்கள் செய்யவேயில்லை. முதலில் தாங்கள் செய்யாததை செய்ததாக காட்டி, அகில இந்திய கட்சி சாத்தியமில்லை என்று முடிவுக்கு வருகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



மேலும், இந்த புதிய முடிவுக்கு எந்தவித திட்டவட்டமான மார்க்சிய விளக்கமும் கொடுக்கமுடியாமல் சனநாயகப் புரட்சி பற்றி வாய்க்கு வந்தபடியெல்லாம் உளறியிருக்கிறார்கள். இவர்களுடைய இந்த புதிய அரசியல் முடிவானது திட்ட வட்டமான எந்தவித வரலாற்று உண்மைகளிலிருந்தும் எடுக்கப்படாத அகநிலை ரீதியாக வந்தடைந்த முடிவாகும்.

மார்க்சியம் அனைத்து முடிவுகளுக்கும் எப்பொழுதும் திட்டவட்டமான ஆய்வை கோருகிறது. முதலில் இவர்கள் சனநாயகப்புரட்சி பற்றி பேசும் போது அதன் இரண்டு கட்டங்களையும் கணக்கிலெடுத்து அதனடிப்படையில் இரண்டாவது காலகட்டத்தில் பல்தேசிய இனநாட்டின் பாட்டாளிவர்க்கம் ஒன்றாக இருப்பதன் மூலம் சனநாயக கடமைகளை நிறைவு செய்ய முடியும் என்பதை ஒரு பொதுக் கோட்பாட்டாக அங்கீகரித்திருக்க வேண்டும். இரண்டாவதாக ஒன்றாக இருப்பதா? பிரிந்து செல்வதா எனும் பிரச்சனைக்கு பாட்டாளிவர்க்க சர்வதேச ஒற்றுமை எனும் பார்வையுடன் மட்டுமே தீர்வை முன் வைத்திருக்கவேண்டும். ஆக, இவர்கள் இந்த இரண்டு பிரச்சனையிலும் திட்டவட்டமான ஆய்வுகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்பது நன்றாக விளங்குகிறது. முழுக்க முழுக்க சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே இந்த முடிவுக்கு வந்திருக்கிறது. இப்படிப்பட்ட போக்குகளைத்தான் நாம் '**தன்னியல்பானது**' என்று குறிப்படுகிறோம் ஆக, த. நா. மா. லெ. க-வினரின் இந்த புதிய முடிவானதுகுட்டி முதலாளித்துவ வர்க்க நலனை அடிப்படையாகக் கொண்ட **தன்னியல்பு தேசியவாதமாகும்.** □

—□—

படிப்பகம்